முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 30.01.2026 அ.வ.எண்.195/2021, வா.சா.1.லோகநாயகி, க/பெ. சின்னதுரை

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 1, 2 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த இளைய சகோதரிகள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான்., 4 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான்.தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியமாக இருந்த சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 7 ஏக்கர் 82 செண்ட் ஆகும். 7 ஏக்கர் 82 செண்ட் சொத்தை ஏ மற்றும் பி அட்டவணை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

2) மேற்படி 2 சொத்துக்களும் பொள்ளாச்சி தாலுக்கா சேர்வகாரன்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் கூறியுள்ள விலாசத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது பிராது, முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் நான் சொன்னவை என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு 1967 பாகப்பத்திரப்படி வந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் முத்துசாமி கவுண்டர் என்றால் சரிதான்.

3) முத்துசாமி கவுண்டர் தகப்பனார் பெயர் சிவன்மலை கவுண்டர் என்றால் சரிதான். சிவன்மலை கவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் ரங்கசாமி கவுண்டர், குட்டியப்ப கவுண்டர், மயில்சாமி கவுண்டர் மற்றும் எனது தகப்பனார் முத்துசாமி கவுண்டர் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகம் ஏற்படுவதற்கு முன்பே குட்டியப்ப

ஒப்பம்/–( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி

கவுண்டர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். குட்டியப்ப கவுண்டரின் மகன் சின்னசாமிகவுண்டர் என்றால் சரிதான்.

4) 1967 ம் ஆண்டு ஏற்பட்ட பாகத்தின் போது குட்டியப்ப கவுண்டரின் மகன் சின்னசாமி கவுண்டர் மைனராக இருந்து அவரும் சேர்ந்து தான் மேற்படி பாகம் அவர்களுக்குள் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான் . வா சா ஆ 1 பாகப்பத்திரப்படி எனது தகப்பனாருக்கு தாவா ஏ சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 1967 ம் ஆண்டு ஏற்பட்ட பாகத்தின் படி குட்டியப்ப கவுண்டரின் மகன் சின்னசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் ஒரு பகுதியை எனது தகப்பனார் வா சா ஆ 2 ன் மூலம் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சொத்து தான் தாவாவில் சொல்லியுள்ள பி அட்டவணை சொத்து என்றால் சரிதான்.

5) வா சா ஆ 1, 2 ன் படி எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எவ்வித ஆவணங்களும் எழுதிவைக்காமல் என்னையும் 1, 2 பிரதிவாதிகளையும் வாரிசுகளாக விட்டுவிட்டு எனது தகப்பனார் காலமாகி விட்டார் என்றால் சரிதான். எனது கணவரின் சொந்த ஊர் வேலாயுதம்பாளையம் கிணத்துக்கடவு தாலுகா என்றால் சரிதான். நான், எனது கணவர் வேலாயுதம்பாளையம் கிராமம் கதவு.எண்.3/87 சி ல் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வேலாயுதம்பாளைம் பூமி கிணத்துக்கடவில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 5,6 கி.மீ இருக்கும்.

6) பொள்ளாச்சியிலிருந்து எவ்வளவு கி.மீ தொலைவில் எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் 15 கி.மீ க்கு உள்ளாக இருக்கும். கிணத்துக்கடவில் இருந்து பொள்ளாச்சி வந்து அதன் பின் எங்களது பூமிக்கு

ஒப்பம்/-( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி

செல்லவேண்டும் என்றால் இல்லை கிணத்துக்கடவில் இருந்து நேராக எங்களது பூமிக்கு செல்லலாம். தாவா ஏ , பி சொத்திற்கும் வேலாயுதம்பாளையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10, 11 கி.மீ இருக்கும், அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/–( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி